1973 நவம்பர் 19]

டாக்டர் ச. மு. பழனியப்பன்: கோவையில் குழந்தைகளுக்கு என்று தனி மருத்துவமனை துவக்க திட்டம் இல்லை என்று சொன்னார்கள். கோவை பொது மருத்துவ மனையிலாவது குழந்தைகளுக்கு என்று தனியாகக் கவனித்து சிகிச்சை அளிக்கும் பிரிவை ஏற்படுத்துவார்களா? குழந்தைகளுக்கு வரும் நோயை டையக்னோஸ் செய்வதற்குக் கூட அங்கே சிறந்த நிபுணர்கள் இல்லை என்று சொல்லப்படுகிறது.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: மருத்துவத் துறையில் மேலே படிக்கிற வர்களுக்கு, 'பெடியாட்ரிக்' துறையில் தனிப்படிப்புக்கு வசதி அளிக்க— மருத்துவக் கல்லூரியோடு இணைந்து சிறப்புப் படிப்புக்காக குழந்தைகளுக்கு என்று தனி மருத்துவ மனையும் கல்லூரியும் ஏற்படுத்துவது மரபு. இங்கே குழந்தை மருத்துவத்தில் நன்கு பயிற்சி பெற்ற டாக்டர்கள் மற்ற இடங்களில் நியமிக்கப்படுகிறார்கள். கோயம்புத்தூரிலும் நியமிக்கப்பட்டிருக்கிறார். கோவையில் ஏற்பட்டிருக்கிற வளர்ச்சி காரணமாக அங்கே தனியாகவே உள்ள பிரிவு விரிவாக்கப்பட வேண்டுமானால் அரசாங்கம் அதனைப் பரிசீலித்து நிறைவேற்ற முயற்சிக்கும்.

திரு. ஜே. ஜேம்ஸ்: மாவட்டங்களில் தனியாகக் குழந்தைகளுக்கு என்று தனி மருத்துவ மனை ஏற்படுத்த இப்போது திட்டம் இல்லை என்று சொன்னார்கள். மாவட்டங்களில் உள்ள தலைமை மருத்துவ மனைகளிலாவது குழந்தைகளுக்கு என்று தனிப் பிரிவை ஏற்படுத்த அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அந்தக் கருத்து அரசாங்கத்திற்கு உண்டு. நிதி நிலையும், பயிற்சி பெற்ற டாக்டர்களும், இடவசதியும் ஏற்பட ஏற்பட அது போன்று தனியாகவே உருப்பெற்றுவிடும்.

சிங்காநல்லூர் கஸ்தூரிபாய் மருத்துவ மனை

*** 160. வினா—திரு. கே. என். குமாரசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிங்காநல்லூர் கஸ்தூரிபாய் ஆஸ்பத்திரியை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று, நகரமன்றத்தின் மூலமும் சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் மூலமும் மகஜர்கள் வந்தனவா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) & (இ): இல்லை.